# 9 சந்தைக்குப் போவோம்

**படத்தை அவதானிப்போம், கலந்துரையாடுவோம், செவிமடுப்போம், சோடிகளாக இணைந்து உரையாடுவோம்.**



**சாரதா** : வணக்கம் முதலாளி.

**முதலாளி** : வணக்கம் அம்மா.

**சாரதா** : என்ன மரக்கறி இருக்கு முதலாளி?

**முதலாளி** : போஞ்சி, கரட், பீட்றூட், லீக்ஸ், நோக்கோல், கோவா, பூசணிக்காய், வெண்டிக்காய், கத்தரிக் காய், முருங்கைக்காய், உருளைக் கிழங்கு எல்லாம் இருக்கு.

**சாரதா** : முருங்கைக்காய் என்ன விலை?

**முதலாளி** : ஒரு கிலோ 60 ரூபாய்.

**சாரதா** : விலை குறைக்க முடியாதா?

**முதலாளி** : அம்மா, இப்ப மரக்கறி எல்லாம் விலை அதிகம்.

**சாரதா** : சரி அப்ப ரெண்டு கிலோ தாங்க. கரட் என்ன விலை?

**முதலாளி** : 100 ரூபாய்.

**சாரதா** : கரட் 500 கிராம் தாங்க. பூசணிக்காய் ஒரு கிலோவும் தாங்க.

**முதலாளி** : இந்தாங்க. வேற என்ன வேணும்?

**சாரதா** : கீரை இருக்கா?

**முதலாளி** : ஓ.... புதுக்கீரை இருக்கு. என்ன கீரை வேணும்.

**சாரதா** : வல்லாரை ஒரு கட்டு தாங்க.

**முதலாளி** : இந்தாங்க.

**சாரதா** : ஐயோ! முதலாளி, இது பழைய கீரை, எனக்கு வேண்டாம். தேங்காய் இருக்கா?

**முதலாளி** : ஓ இருக்கு. பெரிய தேங்காய் ஒண்டு 50ரூபாய், சின்ன தேங்காய் ஒண்டு 40 ரூபாய். எது வேணும்.

**சாரதா** : பெரிய தேங்காய் 5 தாங்க.

**முதலாளி** : இந்தாங்க வேற என்ன வேணும்.

**சாரதா** : ஒண்டும் வேண்டாம். கணக்கு எவ்வளவு?

**முதலாளி** : ஐநூறு ரூபாய்.

**சாரதா** : இந்தாங்க காசு. நன்றி

**முதலாளி** : நன்றி.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| வாங்க | வாருங்கள் |
| இருக்கா? | இருக்கின்றதா? |
| இருக்கு | இருக்கின்றது. |
| தாங்க | தாருங்கள் |
| இந்தாங்க | இந்தாருங்கள் |
| வேணும் | வேண்டும் |
| வேற | வேறு |
| ஒண்டும் | ஒன்றும் |
| ரெண்டு | இரண்டு |

## செயற்பாடு - 01

சோடிகளாக இணைந்து உரையாடலை உணர்ச்சி வெளிப் பாட்டுடன் வாசியுங்கள்.

## செயற்பாடு - 02

**உரையாடலை வாசியுங்கள். பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்யுங்கள். இடைவெளிகளைப் பூரணப்படுத்துங்கள்.**

1. ஒரு கிலோ ________________ நூறு ரூபா
   (கத்தரிக்காய், பீட்றூட், கரட், முருங்கைக்காய்)

2. ஒரு கிலோ முருங்கைக்காய் ________________ ரூபா
   (ஐம்பது, நூறு, அறுபது)

3. ________________ தேங்காய் நாற்பது ரூபா
   (பெரிய, சின்னத்)

4. ________________ தேங்காய் ஐம்பது ரூபா
   (பெரிய, சின்னத்)

5. எல்லா மரக்கறிகளும் ________________ அதிகம்.
   (அளவான, விலை, மலிவு)

## செயற்பாடு - 03

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள், வாசியுங்கள்.**

| | | |
|---|---|---|
| 1. புது | க் கீரை<br>க் கரட்<br>மரக்கறி<br>போஞ்சி | இருக்கா? |
| 2. பழைய | கீரை<br>கரட்<br>மரக்கறி<br>போஞ்சி | வேண்டாம்? |
| 3. நல்ல | பழம்<br>கீரை<br>கரட்<br>மரக்கறி | இல்லையா? |
| 4. சின்ன | ப் பழம்<br>க் கிழங்கு<br>த் தேங்காய்<br>போஞ்சி | தாங்க. |
| 5. பெரிய | பழம்<br>கிழங்கு<br>தேங்காய்<br>பூசணிக்காய் | வேணும் |

## செயற்பாடு - 04

**பொருத்தமான அடைமொழியை வைத்துப் பூரணப்படுத்துங்கள்.**

1. எனக்கு ______________________ பழம் வேண்டும்.
2. எனக்கு ______________________ தேங்காய் வேண்டாம்.
3. எனக்கு ______________________ மரக்கறி வேண்டாம்.
4. எனக்கு ______________________ காய் தாருங்கள்.
5. எனக்கு ______________________ கீரை வேண்டாம்.

## செயற்பாடு - 05

**நீங்கள் பழக்கடை ஒன்றுக்கு சென்றால் எவ்வாறு பழங்களை வாங்குவீர்கள்? அதனை உரையாடல் வடிவில் எழுதுங்கள்.**

## செயற்பாடு - 06

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள், வாசியுங்கள்.**

**தொகுதி 1**

தம்பி சந்தைக்குப் போகின்றான்.
சிறுவன் வருகின்றான்.
குமார் படிக்கின்றான்.

**தொகுதி 2**

தங்கை சந்தைக்குப் போகின்றாள்
சிறுமி வருகின்றாள்.
குமாரி படிக்கின்றாள்.

## தொகுதி 3

அப்பா சந்தைக்கு போகின்றார்.
அம்மா வருகின்றார்.
ஆசிரியர் வருகின்றார்.

## தொகுதி 4

தம்பியும்தங்கையும் சந்தைக்குப் போகின்றார்கள்.
சிறுவனும் சிறுமியும் வருகின்றார்கள்.
சிறுவர்கள் வருகின்றார்கள்.

## தொகுதி 5

நாய் ஓடுகின்றது.
பூனை பாய்கின்றது.

## தொகுதி 6

நாய்கள் ஓடுகின்றன.
பூனைகள் பாய்கின்றன.

## செயற்பாடு - 07

**பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.**

| | | |
|---|---|---|
| 1. | மாணவி | (வாசிக்கின்றான் / வாசிக்கின்றாள்) |
| 2. | அப்பா | (போகின்றார் / போகின்றாள்) |
| 3. | மாமா | (வருகின்றார்கள் / வருகின்றார்) |
| 4. | அம்மா | (சமைக்கின்றான் / சமைக்கின்றார்) |
| 5. | மாணவன் | (பாடுகின்றான் / பாடுகின்றாள்) |
| 6. | மயில் | (ஆடுகின்றன / ஆடுகின்றது) |
| 7. | குதிரை | (ஓடுகின்றன / ஓடுகின்றது) |
| 8. | ஆசிரியர் | (எழுதுகின்றார் / எழுதுகின்றாள்) |
| 9. | மாணவர்கள் | (விளையாடுகின்றன/ விளையாடுகின்றார்கள்) |
| 10. | தாத்தா | (நடக்கின்றார் / நடக்கின்றாள்) |

| | | |
|---|---|---|
| 1. | அவன் பால் குடிக்கின்**றான்.** | (ஆன்) |
| 2. | அவள் பால் குடிக்கின்**றாள்.** | (ஆள்) |
| 3. | அவர் பால் குடிக்கின்**றார்.** | (ஆர்) |
| 4. | அவர்கள் பால் குடிக்கின்**றார்கள்.** | (ஆர்கள்) |
| 5. | அது /இது குடிக்கின்**றது.** | (அது) |
| 6. | அவை / இவை குடிக்கின்**றன.** | (அன) |

## செயற்பாடு - 08

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து வாக்கியங் களைப் பூரணப்படுத்துங்கள்.**

**(செல்கின்றார்கள், பாடுகின்றது, ஆடுகிறாள், வாசிக்கின்றார், தைக்கின்றார்கள், ஊற்றுகின்றார், செல்கின்றார், வருகின்றார், சாப்பிடுகின்றது, விளையாடுகின்றார்கள், பறக்கின்றன, கற்பிக்கின்றனர்.)**

*உதாரணம் :* *தம்பி பந்து விளையாடுகின்றான்.*

*தம்பிமார் பந்து விளையாடுகின்றார்கள்.*

1. *அம்மா தேநீர்* ____________________
2. *தங்கை நடனம்* ____________________
3. *அப்பா பத்திரிகை* ____________________
4. *தங்கைமார் நடந்து* ____________________
5. *தாத்தா நடந்து* ____________________
6. *பாட்டி நடந்து* ____________________
7. *குயில் பாட்டு* ____________________
8. *கிளி பழம்* ____________________
9. *கிளிகள் ஆகாயத்தில்* ____________________
10. *மாணவர்கள் மைதானத்தில்* ____________________
11. *அம்மாமார் ஆடைகள்* ____________________
12. *ஆசிரியர்கள் பாடசாலையில்* ____________________